1992 மார்ச் 31]

சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 57-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 53,73,13,000 -க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (1-4-1992) புதன் கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

47. தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் 1988-89 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை [1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1958) 11(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது](தமிழ்).

48. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1990-91 ஆம் ஆண்டிற்கான முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை [1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

65. கோரிக்கை எண். 36 மற்றும் 37—பாசனம், கட்டிடங்கள் மற்றும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992—93 (தமிழ் ஆங்கிலம்).